**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**
**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.272/15</u>**

2024-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.பரந்தாமன், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.பரந்தாமன், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.பக்தவச்சலம் |
| கிராமம் | - கூழமந்தல் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>08 .01.2024</u>
**<u>பி.வா.சா.1.</u>**

என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். 10 முதல் 16 வரையிலான பிரதிவாதிகளுக்காகவும் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். தாவா சொத்து சம்மந்தமாக நில உடமை பத்திரம் பட்டா தாக்கல் செய்துள்ளேன். (**நடேசன் மகன் துரைசாமி என்பவர் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பட்டா பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 10.09.2003 தேதியிட்ட பத்தவச்சலம் என்பவருக்கு கிருஷ்ணன் மற்றும் நாகன் எழுதிகொடுத்துள்ள கிரைய பத்திரம் அசல் தாக்கல் செய்துள்ளேன். 10.09.2003 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் அசல் பி.சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) வருவாய்துறை வழங்கப்பட்டுள்ள சிட்டா மற்றும் ஆ-பதிவேடு நகல் தாக்கல் செய்யதுள்ளேன். ( பக்தவச்சலம் பெயரில் உள்ள சிட்டா மற்றும்**

**ஆ-பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது) 10.01.2014 அன்று 1ம் பிரதிவாதி வாதி மற்றும் இதர நபர்கள் பெயரில் அனுப்பியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை தாக்கல் செய்துள்ளேன். (10.01.2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு உண்மை நகல் பி.வா.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை வாதி தரப்பில் பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை சேகர் என்பவர் பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை சோமசுந்தரம் என்பவர் பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) தாவா சொத்திற்கான வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். (01.01.1987 முதல் 12.10.2014 வரையிலான வில்லங்க சான்று உண்மை நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்ய ஆட்சேபனை உள்ளதாகவும், 1 மற்றும் 3 ஆவணமானது வழக்கிற்கு பின்னிட்டு தவறாக பெறப்பட்டுள்ள ஆவணம் என்பதாலும் தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் பெறப்பட்டதால் உரிய அதிகாரியின்மூலம் குறியீடு செய்யப்படவேண்டும் என்று ஆட்சேபனை உள்ளதாகவும், 2வது ஆவணம் மோசடியாக ஏற்படத்தப்பட்டுள்ள கிரைய ஆவணம் என்பதால் ஆட்சபேனை உள்ளதாகவும் தெரிவித்தாா். மேற்படி வருவாய்துறை ஆவணம் குறித்து சாட்சியம் அளிக்கப்பட்டால்தான் வழக்கின் தீா்வுகாண ஏதவாக இருக்கும். மேற்படி ஆவணம் தகவல்பெறும் உரிமை சட்டத்தின்கீழ் பெறப்பட்டுள்ளது ஆவணத்தின் தரப்பினா் வாயிலாக

குறியீடு செய்யப்படலாம். இதுகுறித்து வாதி குறக்கு விசாரணை செய்ய வாய்ப்பு உள்ளது. மேலும் ஆவணங்கள் குறித்து வாதிக்கு உள்ள இதர ஆட்சேபனை வாதத்தின்போது பரிசீலிக்கப்படவேண்டியது. எனவே ஆவணங்கள் வாதி தரப்பில் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது.

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.